# முடிவுரை

# முடிவுரை

விரிவான சமூகப்பிரிவினையையும், வாழ்க்கைப் பின்னணியையும் மூலமாகக் கொண்டு தோன்றிய இலக்கியம் புதினமாகும். கனவுகளையும், கற்பனைகளையும் காசாக்கும் காலத்தில் நடைமுறை உண்மைகளையும், நடப்புக்களையும் இலக்கியங்கள் ஆக்குவதற்கும், அவற்றை எழுத்துலகில் இடம்பெறச் செய்வதற்கும் மிகப்பெரும் ஆற்றல் தேவை. அத்தகைய ஆற்றலுடைய எழுத்துக்கள் புதினங்களில் மிகுதியாக இடம்பெறுகின்றன.

தொடக்கக் காலம் முதல் இன்றையக் காலம் வரை புதினங்களில் குடும்பங்கள் மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டு வருகின்றன. பெண்களென்றாலே சமையலறைப்பணிதான் என்ற நிலை முற்றிலுமாக மாறி, கல்வி கற்பதிலும், பணிபுரிவதிலும், உரிமைகளைத் தட்டிக்கேட்பதிலும் ஆணுக்குப் பெண் நிகர் என்ற நிலையினைத் தொண்ணூறுகளில் வெளிவந்த புதினங்கள் சுட்டுகின்றன.

மகளிர் புதினங்கள் அனைத்தும் குடும்ப வட்டத்துக்குள்ளே சுழல்வதுடன், ஆண்களின் முரண்பாடுகளும் அவர்கள் பெண்களுக்கு இழைக்கும் கொடுமைகளும், பாலியல் முரண் உறவுகளும் அதிகமாக சித்திரிக்கப்பட்டுள்ளன. தொண்ணூறுகளில் வெளிவந்த புதினங்களில் கூட்டுக்குடும்பங்களைவிடத் தனிக்குடும்பங்களே மிகுதியாக இருந்த போதிலும், குடும்பச் சிதைவுக்கு ஆண்களே பிரதான காரணமாக அமைவதைப் பல சூழல்கள் சித்திரிக்கின்றன. ஆணாதிக்கம், பிற பெண்களின் குறுக்கீடு (பாலியல் முரண் உறவு), குடிப்பழக்கம், ஆடம்பர மோகம், வரதட்சிணைக் கொடுமை, சாதி வேறுபாடு போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

படித்து அலுவலகங்களில் பணியாற்றும் பெண்களைப் பற்றியும், குடும்பங்களில் பிற குடும்ப உறுப்பினர்களிடம் பெண்களுக்கு அமைகின்ற உறவுகளைப் பற்றியும், உடலாலும், உள்ளத்தாலும் குன்றிப்போகும் பெண்களின் நிலை பற்றியும், புகுந்த வீட்டு வாழ்க்கை முறைக்கும், பிறந்த வீட்டு வாழ்க்கை நிலைக்கும் இடையில் சிக்குண்டு பெண்கள்படும் இன்னல்கள் பற்றியும் மகளிர் புதினங்களில் சுட்டப்பட்டுள்ளன.

குடும்பம் சமூக அமைப்பின் சிறு அலகு. சமூக அமைப்பிற்கு குடும்பமே ஆதாரமானதும் அடிப்படையானதும் ஆகும். குடும்பம் ஐந்து நிலைகளைக் கொண்டதாக இருந்தது. காலமாறுதலுக்கேற்ப குடும்பங்கள் பலமாற்றங்களைப் பெற்றுள்ளன. அக்குடும்பங்கள் கூட்டுக்குடும்பங்களாகவும், பின்னர் அக்கூட்டுக்குடும்பங்களில் ஏற்பட்ட சிக்கல்களினால் தனிக்குடும்பங்களாகப் பிரிந்தும் வளரத் தொடங்கின.

குடும்பத்தின் தோற்றம், வளர்ச்சி, வகைகள், பணிகள், குடும்ப அமைப்பு, திருமணத்திற்கு முந்தையநிலை, மணநிலை, குழந்தை வளர்ப்புநிலை, கூட்டுக்குடும்பங்கள், தனிக்குடும்பங்களாகச் சிதைந்து போவதற்கான காரணங்கள் ஆகியன பற்றி முதலாம் இயலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

குழந்தைகளிடம் இளம்வயதிலேயே தந்தையைப் பற்றி தாய் அறிமுகம் செய்யும் காரணத்தால் தந்தை என்னும் உறவு வணங்கத்தக்கதாக, போற்றுதலுக்குரிய, மரியாதைக்குரியதாக, பிள்ளைகளின் மனதில் பதிந்து விடுகிறது. வெளியுலகத் தொடர்பால் ஆண் பிள்ளைகள் இம்மனப்பதிவினை நாளாக நாளாக மாற்றிக் கொள்கின்றனர். ஆனால் பெண்மக்கள் வீட்டிற்குள்ளேயே மிகுதியாக இருப்பதால், தந்தையர் பற்றிய தங்களது மனப்பதிவைப் பெரும்பாலும் மாற்றிக் கொள்வதில்லை. எனவே தந்தை-மகள் உறவு நிலையானதாக அமைகிறது.

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பது போல் ஒவ்வொரு தாயும் தன் குழந்தைகளைப் பேணவே செய்கிறாள். தாய் என்ற சொல்லே இனிமை மிக்கது. கணவன் துணையுடன் வாழும் மனைவி தன் குழந்தையைப் பராமரிப்பது எளிது. ஆனால் கணவன் துணையின்றி வாழும் ஒரு சராசரிப் பெண் தன் மகளை நல்ல பண்புகளுடன் வளர்ப்பது என்பது கடினம். காதலன்-காதலி உறவானது நல்ல முறையில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையில், சுமூகமாக இருந்தால் அவ்வுறவே பின்னாளில் கணவன்-மனைவி உறவாக மாறி இல்லறம் தழைக்கிறது. இலக்கியங்கள் காதலை மையமாக வைத்தே

புனையப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் காதலைப் பற்றிப் பேசும் பாடல்களே பெரும்பகுதியாக அமைந்துள்ளன. இக்கால உரைநடை இலக்கியமான சிறுகதைகள் மற்றும் புதினங்களில் பெரும்பாலும் காதலன்-காதலி உறவினை மையமாக வைத்தே புனையப்படுகின்றன.

மகன் மேல் அதிக அன்பு செலுத்துபவள் தாய் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்றே கூறலாம். இவ்வாறு மகன் மீது முழுமையான அன்பு செலுத்தும் தாய்க்கு, புதிதாக வரும் அவன் மனைவியும் அவன் மேல் உயிரையே வைக்கிறாள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால்தான் மாமியார்-மருமகள் உறவு உலகநடப்பில் சற்று வித்தியாசமாகத் தெரிகிறது.

தொண்ணூறுகளில் வெளிவந்த மகளிரின் புதினங்களில், குடும்பத்தில் உள்ள உறவுகளான தந்தை-மகள் உறவு, தாய்-மகள் உறவு, காதலன் காதலிஉறவு, கணவன்-மனைவி உறவு, மாமியார்-மருமகள் உறவு, சகோதரன்-சகோதரி உறவு ஆகியன பற்றி இரண்டாம் இயலில் விளக்கப்படுகின்றன.

தொண்ணூறுகளில் வெளிவந்த புதினங்களில் மகளிர் சிக்கல்கள் மிகுதியாகச் சித்தரிக்கப்பட்டன. அதற்குக்காரணம் பெண்கள் வேலைக்குச் செல்வது, ஆணாதிக்கம், குழந்தையின்மையால் சிக்கல், குழந்தை வளர்ப்பில் சிக்கல், பொருளாதாரச் சிக்கல், தாழ்வு மனப்பான்மை, வரதட்சிணைக் கொடுமை, மாமியார்-மருமகள் உறவு நிலை எனப்பல நிலைகளில் சிக்கல்கள் சுட்டப்படுகின்றன. குடும்பத்தில் ஆண் மரணமடைவதால் குடும்பம் சீரழிவு, ஆணாதிக்கம், பெண்ணடிமை செய்தல், பிற பெண்களின் குறுக்கீடு, பொருளாதார நெருக்கடி, தாழ்வுமனப்பான்மை போன்றவை குடும்பச் சிக்கல்களுக்குத் தளங்களாக அமைகின்றன.

பெற்றோர்களுள் ஒருவரின் இறப்பும், பிள்ளைகளின் மனநிலையில் சிதைவை ஏற்படுத்தி விடுகிறது. அன்பு, அரவணைப்பற்ற இயந்திரத்தனமான பெற்றோரின் வளர்ப்பு நிலையினால் சிக்கல் உருவாகிறது. மேலும் ஆண் பெண் பாலுறவுப் பிரச்சினைகள், வேறு பெண்ணுடன் உறவு வைத்துக்கொள்ளும் கணவனின் பாலுறவுச்சிக்கல்கள், வீட்டை விட்டு ஓடிவந்து திருமணம் புரிதல்

ஆணின் குணாதிசயங்களை அறியாமல் மணம்முடித்தல், இளந்தலைமுறையினரின் புதுமைக் கருத்து, மூத்தத் தலைமுறையினரின் பழமைக்கருத்துக்கள், பெற்றோரின் அறிவுரையை ஏற்காது காதலித்து திருமணம் செய்து கொள்வது, நல்லநிலையில் வளர்க்கப்படாத குழந்தைகள், வேலைக்குச் செல்லும் பெண்கள் நிலை ஆணின் நிலை போன்ற பல்வேறு காரணங்களால் சிக்கல் ஏற்பட்டுக் குடும்பம் சிதைவுறும்.

கூட்டுக்குடும்பமாயினும், தனிக்குடும்பமாயினும் கணவன், மனைவி இருவரும் அன்பு செலுத்தி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்பாகவும், அனுசரணையாகவும் இருப்பின் குடும்பத்தில் சிக்கல் எழாது. ஆண் தன்னுடைய மேலாதிக்கத்தைக் காட்டிப் பெண்ணை அடிமைப்படுத்தித் துன்புறுத்தி இழிவுப்படுத்தி நடத்தினால் அங்குச் சிக்கல் எழும். இந்நிலையில் குடும்பம் சிதையும். இதுபோல பெண்ணும் உரிமைகளை மிகைப்படுத்தித் தன் முனைப்போடு குடும்பத்திற்குக் கட்டுப்படாமல் இருக்கும் போதும் குடும்பம் சிதையும். கணவன்-மனைவிக்குள் எழுகின்ற முரண்பாடுகளே குடும்பச்சிதைவுக்கு வழிவகுக்கின்றன என்பது பற்றி மூன்றாம் இயலில் விளக்கப்பட்டுள்ளன.

குடும்ப உறவினராக இல்லாமல், நல்ல உள்ளம், சமூக சேவை மனப்பான்மை கொண்ட பெரியவர்கள் சிலர் குடும்பத்திலுள்ள இளையவர்களுக்கு ஆலோசனை வழங்கி ஆதரவு கொடுத்து வழி நடத்துவதையும், கல்வி, திருமணம் ஆகியவற்றிலும், உறவினர்களின் குழந்தைகளுக்கு உதவுதல் போன்ற செயல்களில் அரண் செய்யும் உறவுகளை இவ்வியல் ஆராய்கின்றது. மூத்த தலைமுறையினரான தாத்தா-பாட்டி பேரக் குழந்தைகளின் உயர்கல்விக்கு ஊக்கம் அளித்தும், குடும்பத்தில் கணவன்-மனைவி இருவரிடையே மனக்கசப்பு ஏற்பட்டு சிக்கல்கள் உருவாகும் போது, அக்குடும்பத்தில் மாமனார்-மாமியார் அச்சிக்கல்களுக்குத் தீர்வு கிட்டும் விதமாகச் சில ஆலோசனைகளைக் கூறி மகன், மகளைச் சற்று விட்டுக் கொடுத்துச் செயல்பட்டால் குடும்பம் என்ற தோட்டத்தில் சமாதானம் என்ற பூப்பூக்கும் என்றும், குடும்பத்தில் தோழி மற்றும் சகோதரன் சிக்கல்களுக்குத் தீர்வு கிட்டும் விதமாக செயல்படுவதன் மூலம் குடும்பத்திற்கு அரண் செய்கிறார்கள் என்பது பற்றி ஆராயப்பட்டு நான்காம் இயலில் விளக்கப்பட்டுள்ளன.

ஆணும், பெண்ணும் அன்பு செலுத்திக் காதல் புரிந்து திருமணம் என்ற பந்தம்மூலம் இணைந்து குடும்பம் என்ற நிறுவனத்திற்குள் நுழைந்து அன்புடன் வாழும்போது அது சிறந்த இல்லறமாகிறது. இந்த இல்லறத்திற்குள் வேறு ஓர் ஆணோ அல்லது பெண்ணோ குறுக்கிடும் போது குடும்பத்தில் முரண் ஏற்படுகிறது.

தோற்றத்திலும், பண்பிலும் பல்வேறுப்பட்ட மனிதர்களை கொண்டு பல்வேறு ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட மனித உறவுகளை ஒருங்கிணைத்து குடும்பமானது இயங்கி வருகிறது. கலப்புமணம், வரதட்சணை, ஆணாதிக்கம், கணவனின் தீயநடத்தை, பெண்ணடிமை, தாழ்வு மனப்பான்மை, பொருளாதாரம் போன்றவற்றின் அடிப்படையில் தோன்றும் சிக்கல்களால் குடும்பத்தின் உறுப்பினர்களான தாய்,தந்தை, கணவன்,மனைவி, மாமா,அத்தை ஆகியோர் குடும்பத்திற்கு சிலநேரங்களில் முரண்செய்யும் உறவுகளாகச் சித்தரிக்கப்படுவதை இவ்வியல் ஆராய்கின்றது. கணவனின் தீயநடத்தையினாலும், விட்டுக் கொடுக்காத தன்மையும் குடும்பச்சிதைவுக்குக் காரணமாக அமைவதுண்டு. திருமணத்தில் பற்றில்லாமல் போதல், பாலுறவு விருப்பங்கள், கணவனின் குடிப்பழக்கம், முரணான பெற்றோரால் வளர்க்கப்பட்ட பிள்ளைகள், தீண்டாமை போன்றவை குடும்பத்திற்கு முரண் செய்யும் உறவுகளாக அமைந்துள்ளன என்பது பற்றி ஐந்தாம் இயலில் ஆராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

இறுதியாக குடும்ப உறவுகள் பேணி, குடும்பம் சிதறாமலிருக்க, கீழ்க்கண்ட முடிவுகள் கண்டறியப்பட்டன.

1. கூட்டுக்குடும்ப உறவில் விட்டுக்கொடுக்கும் பண்பு குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் வேண்டும். அப்பண்பு சற்று தடுமாறினாலும் கூட்டுக்குடும்பம் சிதறும்.

2. பெண்ணின் உயர்வுக்குத் தடையாக இருக்கும் ஆணாதிக்கப் போக்கு முற்றிலும் மாறவேண்டும்.

3. இளையதலைமுறையினரின் அலட்சியப் போக்கும், மூத்தத்தலைமுறையினரின் பிடிவாதப் போக்கும் குறைதல் வேண்டும்.

4. சாதி விட்டுச் சாதி திருமணம் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தால் குடும்பம் சிதறுகிறது.

5. பாலுறவு விருப்பத்தினை விட்டொழித்து, கணவன் மனைவியுடன் மட்டும் சுமூகஉறவு கொண்டு பிற பெண்களுடன் தொடர்பினைத் துண்டிக்க வேண்டும்.

6. அளவற்ற ஆசை, கண்மூடித்தனமான பாசம், குடிப்பழக்கம் போன்றவை குடும்பத்தைச் சீர்குலைக்கின்றன.

7. ஆடம்பரச் செலவினைக் குறைத்து வரவிற்கேற்ற செலவினைச் செய்தல் வேண்டும்.

8. ஆணுக்குப்பெண் சரிநிகர் உரிமை அளித்தல் வேண்டும்.

9. வரதட்சிணைக் கேட்டு பெண்ணைத் துன்பப்படுத்துதல் கூடாது.

10. பெண்கல்வியை திருமண காரணம் காட்டி தடைசெய்தல் கூடாது.

11. குழந்தைப்பருவத்தில் தாய் கண்டிப்புடன் தவறுகளைச் சுட்டிக்காட்டி வளர்த்தல் வேண்டும்.

இவ்வாறு தொண்ணூறுகளில் வெளிவந்த மகளிர் எழுத்தாளர்களின் பல்வேறு கருத்துக்களை உணர்த்தும் புதினங்களின் நோக்குகளும் போக்குகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வைத் தொடர்ந்து, வீட்டுப்பணி புரியும் குடும்பப் பெண்கள் நிலை பற்றியும், பணிக்குச் செல்லும் பெண்கள் நிலை பற்றியும், மகளிர் சமூகத்தில் சந்திக்கும் சவால்கள் பற்றியும், சவால்களைத் தாண்டிச் சாதனைப் படைக்கும் குடும்பப் பெண்கள் பற்றியும் புதின அடிப்படையில் ஆண்கள், மகளிர் என பாகுபடுத்தி ஆய்வாளர்கள் தொடர்ந்து ஆய்வு நிகழ்த்தலாம்.